www.tamilarangam.net

# தமிழர் தலைமையைத் துணிவுடன் ஏற்றுக்கொண்டுள்ள தலைவர் குமார் பொன்னம்பலம் மீதான விமர்சனங்களுக்கு ஒரு பதில்!

அண்மைக் காலங்களில், குறிப்பாக அவுஸ்திரேலியா, இங்கிலாந்து சுற்றுப்பயணங்களின் பின் படிப்படியாக தமிழர்களின் தலைவனாகப் பரிணமித்துவிட்ட தலைவர் குமார் பொன்னம்பலம் மீது பல்வேறு கோணங்களிலிருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

காய்க்கின்ற மரத்திற்கு கல்லெறி விழும் என்பது உண்மைதான், இருப்பினும் தமிழர்களின் தலைவனாகியுள்ள குமார் மீதான அவதூறுகளை முளையிலேயே கிள்ளியெறியும் நோக்குடனேயே இத் துண்டுப்பிரசுரம் வெளியிடப்படுகின்றது.

## யார் இவர்? என்ன செய்தவர்? என்ன செய்து கொண்டிருக்கிறார்?

அவதூறு பரப்புவர்கள், முக்கியமாக மேற்கண்ட கேள்விகளைக் கேட்கிறார்கள்! என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதற்கான பதில் அவர்களுக்கு இப்போது புரிந்திருக்கும்.. தமிழர்களைத் தலைமை தாங்கி வழி நடத்திக் கொண்டிருக்கிறார்!

– யார் இவர், என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதற்கான பதில்களை, இங்கு சண்றைஸ் வானொலி நிகழ்ச்சியில் பலர் வினவ முயன்றபோது அவர் தலைவருக்கே உரிய தன்னடக்கத்துடன் 'கடந்த காலங்களை மறந்துவிடுவோம், உங்கள் மனச்சாட்சியைக் கேழுங்கள்' என்று கூறித் தட்டிக் கழித்துவிட்டாலும், ஒரு சில விடயங்களைக் கோடிட்டுக் காட்டவேண்டியது தமிழ் பிரஜைகளாகிய எமது கடமையாகும்.

## யார் இவர்? என்ன செய்தார்?

தமிழர்களின் சாபக்கேடே இதுதான்! யாராவது ஒருவர் முன்னுக்கு வந்தால் யார் இவர் என்று பூர்வீகம் கேட்பது! இவர் ஒரு பிரபல வழக்கறிஞனின் மகன், பெரிய செல்வந்தன். கொழும்பில் சிங்களத் தலைவர்களுடன் சரிநிகர் சமானமாக நின்று பேசி, எழுதிவரும் துணிச்சல்காரன். வேண்டுமென்றால் தானுண்டு, தன் குடும்பமுண்டு என்று பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவரது தமிழ்பற்று, தேசப்பற்று அவரை அப்படி வாழ விடவில்லை. அதன் விளைவே இன்று தமிழ் மக்கள் அவர் மீது சுமத்திய கடமையை அவர் தன்னடக்கத்துடன் ஏற்றுக் கொண்டமை.

## தூரநோக்குள்ள தலைவனுக்கோர் எடுத்துக்காட்டு:

70களில் தமிழ்க் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணைந்து கூட்டணி அமைத்து தமிழர்களின் ஒற்றுமையைக் காட்டவேணும் என்று முனைந்து செயற்படுகையில், இருபது வருடங்களின் பின் ஒற்றுமை, கூட்டணி என்பதெல்லாம் அர்த்தமற்றவையாகிவிடும் என்பதை அன்றே புரிந்து கொண்டதனால், அன்றிலிருந்து இன்று வரை தனிமனிதனாக தமிழ்க் காங்கிரசைக் கட்டிக்காத்து வந்த பாதுகாவலன், தீர்க்கதரிசி!

## மாற்றுப் பாசறையின் மைந்தன்:

சண்றைஸ் வானொலி நிகழ்சியில் 'ஏன் தமிழ்க் காங்கிரசும், விடுதலைப் புலிகள் இயக்கமும் இணைந்து கொள்ளக் கூடாது?' என்று நேயர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் 'புலிகள் ஒரு பாசறை எனில், நான் இன்னுமொரு பாசறையில் வளர்ந்தவன்' என்று சூசகமாகத் தலைவர் குறிப்பிட்டதைப் பலர் புரிந்திருக்க மாட்டீர்கள். ஆம் புலிகள் வீரத்தின் உறைவிடம் என்றால், குமார் கல்வி, செல்வம், விவேகத்தின் உறைவிடம் என்று, அவர் தனது தன்னடக்கத்தை விட்டுச் சொல்லிவிடுவார் என்று நீங்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்? அன்றைய செல்வநாயகம்–பொன்னம்பலம் கூட்டணியை விட இன்றைய பிரபா–குமார் கூட்டணி பல மடங்கு பலம் வாய்ந்ததும், காத்திரமானதும் என்பதை தமிழ் மக்களில் புரிந்து கொள்ளாதவர்கள் எவரும் இருக்க முடியாது!

## தமிழ் மக்களின் முடிந்த முடிவு போராட்டமே!

வடக்கு கிழக்கிலுள்ள மக்களின் கோரிக்கை பற்றி அங்குள்ள மக்களின் அபிப்பிராயங்களையும் கேட்டாலென்ன என்று ஒருவர் வடகிழக்கில் இன்று வாழும் மக்களின் போராட்ட வேட்கையைக் கொச்சைப்படுத்த முயன்ற போது, நறுக்கென்று உணர்ச்சிவசப்பட்டு பதிலளித்தார் தலைவர்–அங்குள்ள மக்கள் சிங்கள அரசு, தமிழர்களின் தாயகக் கோட்பாட்டையும், சுயநிர்ணய உரிமையையும் நிபந்தனையற்ற முறையில் அங்கீகரித்தாலொழியப் போராட்டம் உக்கிரமாகத் தொடரவேண்டுமென்றே விரும்புகிறார்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதே அவரது நீண்ட பதிலின் சுருக்கமாகும். அங்குள்ள மக்களின் உண்மையான போராட்ட மனநிலையைப் புரியாமல், ஒரு சில சுயநலக்காரர்கள் தமது பெற்றோர், உறவினர்களின் கடிதங்களை அடிப்படையாக வைத்து, அங்குள்ள மக்கள் வாழ்வு சுமுக நிலைக்குத் திரும்புவதையே விரும்புகிறார்கள் என்று பரப்பிய குழப்பமான கருத்துக்களுக்கு இது ஒரு நல்ல பதிலடியாக இருந்தது.

**கொழும்புத் தமிழ்க் குழுக்கள் அரசியல் வானிலிருந்து அகற்றப்பட வேண்டும்:**

தலைவர் குமார், இன்றைய காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் அதிமுக்கிய கடமைகளாக இனங்கண்டுள்ள இரண்டு விடயங்களுள் ஒன்று கொழும்புத் தமிழ்க் குழுக்கள் அரசியல் வானிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பது. வானொலி நிகழ்ச்சியில், அரசியல் விளக்கம் குறைந்த ஒரு நேயர், இதன் அர்த்தம்தான் என்ன என்று துருவித்துருவி வினவியபோது, தலைவர் குமார் அவர்கள் ராஜதந்திரமாகப் பதிலளித்தார் – அவர்களை நெருக்குதலுக் குள்ளாக்கிச் செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று – தமிழ் அரசியலில் பரிச்சயமுள்ளவர்களுக்கு, அரசியல் வானிலிருந்து அகற்றப்படுதல் என்பதன் அர்த்தம் புரியாதா?
– சிலர் குழப்பமடையலாம், பலர் அதிர்ச்சியடையலாம், இயக்கப் பேச்சாளர்களே இப்படிப் பச்சையாகச் சொல்லத் தயங்குவார்கள் என்று. இங்குதான் அவரது தலைவருக்கான துணிச்சலும், வஞ்சகமில்லாமல் நினைத்ததைச் சொல்லும் தன்மையும் வெளிப்படுகின்றது.
– இன்னும் சிலர், இவ்வாறான போராட்ட நியதிகளை ஏற்றுக்கொள்ளச் சங்கடப்படுபவர்கள் கேட்கலாம் சுந்தரம் முதல் கரவைக் கந்தசாமி வரை பலர் அரசியல் வானிலிருந்து அகற்றப் பட்டார்களே, இதனால் போராட்டம் பலமடைந்ததா? என, அவர்களுக்கு ஒரே பதில்தான் – அவர்கள் இல்லாததால் அதற்கான பதிலை ஒருவரும் தீர்மானிக்க முடியாது என்பது தான்.
– இவ்வாறான குரூரமான விடயத்தைக் கூச்சமின்றி அடித்துச் சொல்லும் பாங்கு பற்றி சிலர் அவதூறு செய்ய முனைகிறார்கள். இவரது தனிப்பட்ட மனநிலை பற்றியும், மனிதாபிமானம் பற்றியும் கேள்வி எழுப்புகின்றார்கள். இவர்களுக்கு ஒன்று புரிய வேண்டும், இவ்வாறான கறாரான முடிவுகள் எடுப்பதிலும் அதைச் செயற்படுத்தக் கோருவதிலும் எவ்வளவுதான் வேதனைகள் இருப்பினும், தமிழ் மக்கள் அவர் மீது சுமத்திமிருக்கும் கடமையை நிறைவேற்றுவதற்காக, இவ்வேதனைகளையும், சோதனைகளையும் தாங்கிக் கொண்டே, வைராக்கியத்தை வரவழைத்து இப்படிக் கூறுகிறார் – எதையும் தாங்கும் இதயம் அவருக்கு!

**வெளிநாட்டுத் தமிழர்கள் தளமாக அமைய வேண்டும்:**

தலைவர் குமார் இனங் கண்டிருக்கும் அதிமுக்கிய கடமைகளுள் இரண்டாவது கடமை வெளிநாட்டுத் தமிழர்கள் தமிழ் போராட்டத்திற்கான தலைமையை அதாவது அரசியல் தலைமையைக் கொடுக்க முன்வரவேண்டும் என்ற அறைகூவல்.
– இந்த விடயத்தில் தன்னடக்கம் என்று சுற்றி வளைக்காமல் நேரே விடயத்திற்கு வருவோம். இன்றைய வெளிநாட்டுத் தமிழ்ஈழ அரசியலின் நிலை என்ன? மக்கள் மத்தியில் விரக்தி, வெளிநாட்டு அரசுகள், கட்சிகளிலிருந்து தனிமைப் படுத்தப்பட்ட நிலை, பயங்கரவாதம் என்ற பெயர் வேறு, இயக்கத்தின் அச்சாணிகளாச் செயற்பட்டுவந்த கனடா சுரேஷ், சுவிஸ் முரளி போன்றோர் கைது செய்யப்பட்டு மாதங்கள் பலவாகியும் விடுவிக்கப் படாதநிலை. இது ஒரு புறத்தில் வெற்றிடத்தைத் தோற்றுவித்திருக்கின்றது. மறுபுறத்தில் கொழும்புத் தமிழ்க் குழுக்கள் விரைவில் அரசியல் வானிலிருந்து அகற்றப்பட்டதும் அங்கு ஒரு வெற்றிட நிலை தோன்றப் போகின்றது என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
– இந்நிலையில் தீர்க்கதிரிசனத் தலைவர் வெளிநாட்டுத் தமிழர்களிடம் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி கூறுவதில் என்ன தவறு இருக்கின்றது? வெளிநாட்டுத் தமிழர்களில் படித்தவர்கள் பலர் உள்ளனர். கத்தியைத் தீட்டிச் சாதித்த காலகட்டம் முடிந்து புத்தியைதத் தீட்ட வேண்டிய காலகட்டத்தினுள் நுழைந்திருக்கும் தமிழினத்திற்கு வெளிநாட்டுத் தமிழர்கள் தலைமை தாங்கவேண்டும் என்ற தலைவரின் அறை கூவல் தீர்க்க தரிசனமானதும், விவேகமானதும் என்பதை எவரும் மறுக்க முடியாது.
– இந் நிலையில் வடக்கு–கிழக்கிலுள்ள மக்களின் விடுதலை வேட்கையை, போராட்ட உத்வேகத்தை மதித்து, வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் போராட்டம் உக்கிரமடைய இயலுமான கடமைகளைச் செய்வதுடன் – தலைமை ஏற்பதற்கும் தம்மைத் தயார் படுத்த வேண்டும் என்ற தலைவரின் அறைகூவலை செயற்படுத்த முன்வாருங்கள் – தொடர்ந்தும் தலைமையை அவதூறு செய்யாதீர்கள்.

**வெளிநாட்டுத் தமிழர்களே ஒன்று படுங்கள்!**
**போராட்டம் உக்கிரமாகத் தொடர வழி செய்யுங்கள்!!**

– வெளிநாட்டுத் தமிழ் பிரஜைகள் குழு.